# தாரமங்கலம் நகர்மன்ற சாதாரண கூட்ட நாள்.09.05.2022ன் உண்மை நகல்

2022ம்ஆண்டு 04/2022ம் மாதத்திற்கான சாதாரண கூட்டம் 09.05.2022ம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அலுவலக முதல் தளத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற தாரமங்கலம் நகர்மன்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை. திரு.டி.எம்.எஸ்.குணசேகரன் அவர்கள்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**தீர்மான எண் – 46 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் ஏப்ரல்–2022 மாதங்களில் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்துபிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 04/22 | 0 | 0 | 0 | 2 | 0 | 2 | 0 | 0 | 0 |

**தீர்மான எண் – 47 (2 )**

ஏப்ரல் 2022–ஆம் மாதத்தில் வரப்பெற்ற அரசாணைகள் சுற்றறிக்கைகள் மற்றும் அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்குவைக்கப்படுகிறது.

**தீர்மான எண் –48 (3)**

1) இம்மாத வரவு – 26626662/–

2) இம்மாத செலவு – 19240409/–

மார்ச் 2022–ஆம் மாதத்தின் செலவுச்சீட்டு எண் 811 முதல் 905 வரை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண் – 49 (4)**

தாரமங்கலம் நகராட்சி 4 வது வார்டு பெரியாம்பட்டி பொதுமக்களின் மயானத்திற்கு இடஒதுக்கீடு கோரியும், ஓமலூர் ரோடு, காவலர் குடியிருப்பு, அரசு பேருந்து பணிமனை வழியாக சுமார் 500மீ குடிநீர் பைலைன் விஸ்தரிப்பு பணி செய்து குடிநீர் வசதி செய்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஏ.சாமுண்டீஸ்வரி அவர்களது மனு மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 50 (5)**

தாரமங்கலம் நகராட்சி 5வது வார்டு பகுதிகளில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்றுள்ள 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.சி.தனபால் அவர்களது மனு மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வடிகாலுடன் கூடிய சாலை அமைக்க வேண்டிய பணிகள் விவரம் |
|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வ.உ.சி.நகர் பகுதியில் சுமார் 840மீட்டர் நீளத்திற்கு வடிகாலுடன் கூடிய தார்சாலை அமைத்தல். |
| 2. | நங்கவள்ளி மெயின் ரோடு முதல் சீனி தோப்பு வழியாக ஜெயப்பிரகாஷ் வீடு வரை 830 மீ சாக்கடையுடன் கூடிய தார்சாலை அமைத்தல். |
| 3. | சண்முகம் பிள்ளை நகரில் சுமார் 230 மீ சாக்கடையுடன் கூடிய தார்சாலை அமைத்தல். |
| 4. | நங்கவள்ளி மெயின் ரோடு முதல் வக்கீல் கோபால் வீடு வரை 220 மீ சாக்கடையுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல். |
| 5. | வெட்னிகரடு பஞ்சாயத்து ரோடு முதல் சர்ச் வரை சுமார் 320மீ தார்சாலை அமைத்தல். |
| 6. | பஞ்சாயத்து ரோடு முதல் 1,2,3,4 சுமார் 390 மீ சிமெண்ட் சாலை அமைத்தல். |
| 7. | வெட்னிகரடு வ.உ.சி.நகரில் சுமார் 500 மீ நீளத்திற்கு சாக்கடையுடன் கூடிய தார்சாலை அமைத்தல். |

| வ.எண் | புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் |
|---|---|
| 1. | 5 வது வார்டு வ.உ.சி.நகர் பகுதியில் புதிதாக ஆழ்துளைக்கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி 2000லிட்டர் மினிடேங்க் அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |
| 2. | 5 வது வார்டு வெட்னிகரடு சின்னாகவுண்டர் வீடு அருகில் புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி 2000லிட்டர் மினிடேங்க் அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |
| 3. | 5 வது வார்டு வெட்னிகரடு மேற்கு பொரிக்கார சரவணன் வீடு அருகில் புதிதாக ஆழ்துளைக்கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி 2000லிட்டர் மினிடேங்க் அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |

| வ.எண் | தெருவிளக்கு பொருத்துதல் |
|---|---|
| 1. | வெட்னிகரடு தண்டபாணி வீடு முதல் ராமலிங்கம் வீடு வரை உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 2. | சுப்ரமணி ஆசிரியர் வீடு முதல் Dr.அருண் வீடு வரை உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 3. | வெட்னிகரடு கிழக்கு சின்னுஆசாரி வீடு முதல் டைலர் தங்கராஜ் வீடு வரை உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 4. | வெட்னிகரடு மேற்கு குமார் அம்மாசி வீடு முதல் Er .சசிசேகரன் வீடு வரை உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 5. | வெட்னிகரடு ஆசிரியர் காலனி மாதையன் வீடு அருகில் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 6. | ஜலகண்டபுரம் மெயின் ரோடு மோகன் வீடு HP அருகில் உள்ள சின்னபையன் மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |
| 7. | நங்கவள்ளி மெயின் ரோடு பவர் ஆபிஸ்அருகில் உள்ள கம்பம் முதல் வெங்காயகார ரமேஷ் வீடு வரை உள்ள கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல். |

அலுவலக குறிப்பு

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

தீர்மான எண் – 51 (6)

தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 6வதுவார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஏ.செல்வி அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் |
|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி 6 வது வார்டு டீச்சர்ஸ் காலனி, பிள்ளையார் கோவில் அருகில் ஆகிய இரண்டு இடங்களில் கல்வெர்ட்டுகள் புதுப்பித்து அமைத்தல் பணி செய்தல். |

அலுவலக குறிப்பு

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

தீர்மான எண் – 52 (7)

தாரமங்கலம் நகராட்சியின் 8 வது வார்டின் அனைத்து பகுதிகளையும் சேர்த்து ஓமலூர் ரோடு என உள்ளது. பகுதி வாரியாக அந்தந்த பகுதிக்கு ஏற்கனவே உள்ள கீழ்க்காணும் பெயர்களை மாற்றாமல் வைத்து அனைத்து அரசு சார்ந்த பதிவேட்டில் மற்றும் நகராட்சி பதிவேட்டில் சேர்க்க ஆவண செய்திடக்கோரியும், வரப்பெற்ற 8வதுவார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜெயந்தி செந்தில்நாதன் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பகுதியின் பெயர் |
|---|---|
| 1. | கைலாஷ் நகர் |
| 2. | கைலாசநாதர் தெரு |
| 3. | படையாச்சி தெரு |
| 4. | பாலராஜகணபதி தெரு |
| 5. | பழனிஆண்டவர் தெரு |
| 6. | காமராஜ் நகர் |
| 7. | சரஸ்வதி காலனி |

அலுவலக குறிப்பு

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

தீர்மான எண் – 53 ( 8)

தாரமங்கலம் நகராட்சியில் 9 வது வார்டு பகுதியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 9வதுவார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஆர்த்திகோபிநாதன் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | தெருவிளக்கு பொருத்த வேண்டிய பகுதி |
|---|---|
| 1. | 9 வது வார்டு புதிய பிளாட்டில் மின் விளக்குகள்–6. புதியதாக அமைத்தல். |
| 2. | 9 வது வார்டு மகாமுனி வீட்டின் பின்புறம் –2 புதியதாக அமைத்தல். |
| 3. | 9 வது வார்டு சாய்பாபா கோவில் தெரு –4புதியதாக அமைத்தல். |
| 4. | 9 வது வார்டு நடுநிலைப்பள்ளி தெரு–2 புதியதாக அமைத்தல். |

| | |
|---|---|
| 5. | 9 வது வார்டு எத்திராஜ் தெரு–2 புதியதாக அமைத்தல். |
| 6. | 9 வது வார்டுபிள்ளையார் கோவில் எதிரில் –1 புதியதாக அமைத்தல். |
| 7. | 9 வது வார்டு மாரியம்மன் கோவில் எதிரில்–1 புதியதாக அமைத்தல். |
| 8. | 9 வது வார்டு பங்களா தோட்டம் பின்புறம்–2 புதியதாக அமைத்தல். |

<u>அலுவலக குறிப்பு</u> தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 54 (9)</u>

தாரமங்கலம் நகராட்சியில் 11 வது வார்டு பகுதியில் பண்டார இடும்ப முதலி தெருவில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து மின்மோட்டார் மினிடேங்க் அமைத்தல் பணி செய்து தரக்கோரி வரப்பெற்ற 11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.விஜயாசிவகுமார் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 55 (10)</u>

தாரமங்கலம் நகராட்சியில் 13 வது வார்டு பகுதியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.டி. தமிழ்செல்வி துரைராஜன் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>குடிநீர்</u>

| | |
|---|---|
| 1. | பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள குடிநீர்பைப் லைன் 3 இன்ச் பைப்பை 4 இன்ச் பைப்லைனாக மாற்றுதல். |

<u>சாலை</u>

| | |
|---|---|
| 1. | பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளதை புதிதாக அமைக்க வேண்டும். |

<u>தெருமின்விளக்கு</u>

| | |
|---|---|
| 1 | பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள முதல் கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல். |
| 2 | புதுத்தெரு லைன்–1ல் போர்வெல் டேங்க் அருகில் மண்பாண்டம் செய்பவர்வீடு அருகில் உள்ள முதல் கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல். |
| 3 | புதுத்தெரு லைன்–1ல் சிவசங்கரன் ஆசிரியர் வீடு அருகில் உள்ள 2வது கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல். |
| 4 | பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள பெ.சி.மாதேசன் வீடு அருகில் உள்ள கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துதல். |

<u>அலுவலக குறிப்பு</u>

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 56 (11)</u>

தாரமங்கலம் நகராட்சியில் 17 வது வார்டு பகுதியில் நகைக்கடை சுந்தரவடிவேல் வீடு அரியாபையன் வெங்கடாசலம் வீடு வரை வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல், மேலும் இதே பகுதியில் உள்ள வட்டக்கிணற்றுக்கு மூடியிட்டு பாதுகாப்பு ஏற்பாடு செய்து

தரக்கோரி வரப்பெற்ற 17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கோ.ருக்மணிகோவிந்தராஜீ அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 57 (12)**

தாரமங்கலம் நகராட்சியில் 19 வது வார்டு பகுதியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 19 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.அகிலாண்டீடேஸ்வரி அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. காடையாம்பட்டி அப்பாவு முதலி சந்தில் ஜனதா லட்சுமணன் சேட்டு அருகில் கோடையில் வறட்சியை சமாளிக்க புதிய ஆழ்துளைக்கிணறு அமைக்க வேண்டும்.
2. மேற்கு ரத வீதி கொய்யாமரத்து வேல் வீடு முதல் குள்ளமுத்து செல்வராஜ் வீடு வரை கான்கிரீட் சாலை அமைத்தல்.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 58 (13)**

தாரமங்கலம் நகராட்சியில் 20 வது வார்டு பகுதியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.சின்னுசாமி அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. கிழக்கு பாவடி சமுதாயக்கூடம் அருகில் ஏற்கனவே உள்ள போர்மோட்டாருக்கு மினிடேங்க் மற்றும் சுவிட்ச் பாக்ஸ் பொருத்தித் தருதல்.
2. புலவன் சந்து தங்கமணி வீடு அருகில் சாக்கடையை புதுப்பிக்க வேண்டும்.
3. இராஜமுதலி சந்தில் சிங்காரம் வீடு அருகில் சாக்கடையை புதுப்பித்துக் கொடுக்க வேண்டும்.
4. அம்மணி பழனியப்ப முதலி சந்து பழனிசாமி வீடு அருகில் உள்ள மினிடேங்க்லிருந்து கஞ்சா ராமலிங்க சந்திற்கு பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல்.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 59 (14)**

தாரமங்கலம் நகராட்சியில் 21 வது வார்டு பகுதியில் சரவண குப்புசாமி முதலி சந்து முதல் குருசாமி வீடு வரை பழுதடைந்துள்ள சாக்கடையை புதுப்பித்துக் கொடுக்கக்கோரி வரப்பெற்ற 21 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பி.கோகிலா அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 60 (15)**

தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.டி.வேதாச்சலம் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் |
|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி 23 வது வார்டு தங்கசாலை வீதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து சுமார் 250 அடி நீளத்திற்கு குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |
| 2. | தாரமங்கலம் நகராட்சி 23 வது வார்டு மகாத்மாகாந்தி வீதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |
| 3. | தாரமங்கலம் நகராட்சி 23 வது வார்டு மகாத்மாகாந்தி வீதியில் சேகர்வீடு அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மேலும் உயர்த்தி குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |
| 4. | தாரமங்கலம் நகராட்சி 23 வது வார்டு யோககிரி வீடு முன்புறமுள்ள கைப்பம்பு நீக்கி மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி அமைத்து மின்மோட்டாருடன் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல். |

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 61 (16)**

தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.மைசூர் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**சாலைப்பணிகள்**

1. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி நுழைவுவாயில் அருகில் முதல் சந்து கண்ணன் வீடு முதல் குணா வீடு வரை 15 அடி அகலம் 200 மீட்டர் நீளம் கொண்ட சிமெண்ட் சாலை அமைத்தல்.
2. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி நுழைவு வாயில் இரண்டாவது சந்து டி.கே.எஸ்.வீடு முதல் வைரமுத்து வீடு வரை 15 அடி அகலம் 220 மீட்டர் நீளம் கொணட சிமெண்ட் சாலை அமைத்தல்.
3. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி நுழைவு வாயில் அருகில் மூன்றாவது சந்து கோவிந்தன் வீடு முதல் கதிர் வீடு வரை 2 அடி அகலம் 160 மீட்டர் நீளம் கொண்ட சிமெண்ட் சாலை அமைத்தல்.
4. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி குமார் வீடு முதல் அமராவதி வீடு வரை 15 அடி அகலம் 180 மீட்டர் நீளம் கொண்ட் சிமெண்ட் சாலை அமைத்தல்.

**குடிநீர் திட்டப்பணிகள்**

1. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி பிள்ளையார் கோவில் வீதி ஐயர் வீட்டு அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து, புதிய மினி டேங்க் வைத்து 500 மீட்டர் பைப் லைன் அமைத்தல்.
2. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி ராஜமாணிக்கம் வீதி முனியப்பன் கோவில் அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து, புதிய மினி டேங்க் வைத்து 600 மீட்டர் பைப் லைன் அமைத்தல்.
3. 24வது வார்டு எம்.ஜி.ஆர்.காலனி துரையன் வீட்டு அருகில் ஒரு பழைய ஆழ்துளை கிணறு உள்ளது. அதில் புதிய மின்மோட்டார் அமைத்து, மினி டேங்க் வைத்து 500 மீட்டர் பைப் லைன் அமைத்தல்.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 62 ( 17)**

தாரமங்கலம் நகராட்சியில் எம்.ஜி.ஆர். காலனி அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடம் மற்றும் ஆண்கள் கழிப்பிடங்களின் சுமார் 5 க்கும் மேற்பட்ட கழிப்பிட இருக்கைகள் தரையில் புதைந்து, பழுதடைந்தும், தண்ணீர் வெளியே செல்லாமல் அடைப்பு ஏற்பட்டு, உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், உடனே சரி செய்து பயன்பாட்டிற்கு செய்து தரக்கோரி வரப்பெற்ற 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.மைசூர் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியில் எம்.ஜி.ஆர். காலனி அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடம் மற்றும் ஆண்கள் கழிப்பிடங்களின் பழுதடைந்துள்ள கழிப்பிட இருக்கைகளை பழுது பார்த்திட உரிய மதிப்பீடு தயாரித்து உரிய ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 63 (18)**

தாரமங்கலம் நகராட்சியில் 25 வது வார்டு பகுதியில் சமத்துவபுரம் பகுதியில் கீழ்க்காணும் பணிகள் செய்து கொடுக்கக்கோரி வரப்பெற்ற 25 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கே.அர்த்தனாரி அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**குடிநீர் தெருவிளக்கு மற்றும் பொதுக்கழிப்பிடம்**

1. சமத்துவபரம் பகுதியில் உள்ள 150 குடும்பங்களுக்கு ஒரு பொது குடிநீர் குழாய் மட்டுமே உள்ளதால் பற்றாக்குறையை போக்குவதற்கு 6 இடங்களிகளில் பொது குடிநீர் குழாய் அமைக்க வேண்டும்.
2. சமத்துவபரம் பகுதியில் உள்ள அனைத்து மின்கம்பங்களுக்கும் தெருவிளக்கு பொருத்த வேண்டும்.
3. சமத்துவபரம் பகுதியில் ஏற்கனவே பொதுக்கழிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல்.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் நிதிநிலைமைக்கேற்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 64 (19)**

தாரமங்கலம் நகராட்சி கீழ்சின்னாகவுண்டம்பட்டியில் செயல்பட்டுவரும் வளமீட்பு பூங்கா எதிர்ப்புறத்தில் உள்ள கழிப்பிடத்தின் செப்டிக் டேங்க்கில் சாக்கடை நீர் நிரம்பி தேங்கிவருகிறது. பள்ளி அருகில் உள்ளதால் துர்நாற்றம் வீசுகிறது. மேலும் இந்த டேங்க் மிகவும் சிறியதாக உள்ளதால் அடிக்கடி நிரம்பி விடுகிறது.அந்த சாக்கடை நீரை சங்ககிரி மெயின் ரோட்டில் ஓரமாக அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்காலுடன் இணைக்கும் விதமாக கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டி வரப்பெற்றுள்ள வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.முருகன் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தாரமங்கலம் நகராட்சி கீழ்சின்னாகவுண்டம்பட்டியில் செயல்பட்டுவரும் வளமீட்பு பூங்கா எதிர்ப்புறத்தில் உள்ள கழிப்பிடத்தின் செப்டிக் டேங்க்கில் கடந்த மாதத்தில் மட்டும் 3 முறை சாக்கடை நீர் நிரம்பி தேங்கி கழிவுநீர் வாகனம் மூலம் அகற்றப்பட்டுள்ளது.

பள்ளி அருகில் அடிக்கடி நிரம்பி கழிவுநீர் வெளியேறி துர்நாற்றம் வீசி வருவதால், சாக்கடை நீரை சங்ககிரி மெயின் ரோட்டில் ஓரமாக அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்காலுடன் இணைக்கும் விதமாக கழிவுநீர் வாய்க்கால் அமைத்திட உரிய மதிப்பீடு தயாரித்து உரிய ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 65 ( 20)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் கொட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகளில் சில கயவர்களால் அடிக்கடி தீ வைக்கப்பட்டு எரிந்து புகைமூட்டமாக சுகாதாரக்கேடு ஏற்படுவதாலும், குப்பைக்கிடங்கில் புகை மூட்டமாக இருப்பதாலும் உரிய சுகாதாரத்தை பேணும் பொருட்டு தீயை அணைப்பதற்கு குப்பைக்கிடங்கில் தண்ணீர்வசதி ஏற்படுத்திட குப்பைக்கிடங்கில் அங்குள்ள ஆழ்துளைக்கிணற்றிலிருந்து தேவையான பைப்லைன் விஸ்தரிப்பு பணியை செய்திட கோரி வரப்பெற்றுள்ள வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஏ.முருகன் அவர்களது மனு மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேலும் இது தொடர்பாக பசுமைத்ததீர்ப்பாயத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாலும், உரிய சுகாதாரத்தை பேணும் பொருட்டு தீயை அணைப்பதற்கு குப்பைக்கிடங்கில் தண்ணீர்வசதி ஏற்படுத்திட உரிய மதிப்பீடு தயாரித்து உரிய ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 66 (21)**

தாரமங்கலம் நகராட்சிக்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு உதிரிசாமான்கள், குடிநீர்த்திட்ட பணிக்கு பராமரிப்பு உதிரி சாமான்கள் மற்றும் பொது சுகாதார பொருட்கள் மற்றும் புதிய 2 HP, 3 HP மற்றும் 5 HP மின் மோட்டார்கள் கொள்முதல் செய்தல் மேலும் , பழைய மின் மோட்டார் பழுதுநீக்கம் செய்தல் ஆகியவை உள்ளாட்சி நகர்மன்ற தேர்தல்–2022 நடைபெற்ற காரணத்தினால் 2022–23ஆம் ஆண்டிற்கு மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்ய டெண்டர் பெறப்படவில்லை. ஆகையால், 2021–22 ஆம் ஆண்டுக்கு டெண்டர் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கே அந்தந்த நிறுவனங்களிலிருந்து 01.04.2022 முதல் 30.06.2022 வரையிலோ அல்லது புதியடெண்டர் இறுதி செய்யும்வரை எது முன்னரோ அதுவரை கொள்முதல் செய்வதற்கு 04.04.2022–ல் பெறப்பட்ட நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 67 (22)</u>

தாரமங்கலம் நகராட்சிக்கு வாரச்சந்தை பொதுஏலம் 2022–23 ஆம் ஆண்டிற்கு முதல் ஏலம் 11.03.2022 ஆம் தேதியில் நடைபெற்றது. மூன்றாண்டு அடிப்படை மதிப்பு ரூ.17,56,573/– அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து ஏலம் கோரியதில் ஏல டேவணி தொகை செலுத்த ஏலதாரர் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் கொரோனா தொற்றினால், வாரச்சந்தையில் கடைகள் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் அரசு நிர்ணயித்த ஏல தொகை அதிகமாக இருப்பதாலும் ஏலத்தொகையினை குறைத்து ஏலம்விடுமாறும் கோரினர். இருப்பினும் ஏலம் கோரப்படாததால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டு இரண்டாவது ஏலம் 21.03.2022 ஆம் தேதி நடைபெற்றது. அதில் ஏலதாரர்களில் அடிப்படை மதிப்பினை விட குறைவாக 765000/– வரை ஏலம் கோரினர். இருப்பினும் ஏலத்தொகை மிக குறைவாக இருப்பதால், ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது. மூன்றாவது ஏலம் 29.03.2022– அன்று நடைபெற்றது. இதில் அதிகபட்சமாக திரு.க.பெரியசாமி த/பெ.கந்தசாமி என்பவர் ரூ.1757000/– கோரினார். 2019–20ல் ரூ.1671600/–ம், 2021–22ல் 17,55,180/–ம் ஏலம் விடப்பட்டதில், 2021–22ல் ஏலம் எடுத்தவர் வாரச்சந்தை நடத்தாமல் திரும்ப ஒப்படைத்து விட்டதால் துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வந்ததில், சராசரியாக வாரம் ரூ.9000/–க்கு ரசீது பெறப்பட்டு பொதுநிதிக்கணக்கில் செலுத்தப்படுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் 2019–20 ஆம் ஆண்டிற்கான ஏலத்தொகை 1671600/– மற்றும் துறை ரீதியாக 2021–2022ம் ஆண்டு வசூல் செய்யப்பட்டு வரும் தொகையை வாரம் 9000/- வீதம் 54 வாரங்களுக்கு ரூ.406000/– மட்டுமே வசூலானதாலும், தற்போது கோரிய ஏலத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை 1755000/– விடவும் அதிகமாக உள்ளதாலும், வாரச்சந்தையின் தெற்கு பகுதியில் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாலும், மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.1757000/– என ஏலம் கோரிய திரு.க.பெரியசாமி த/பெ.கந்தசாமி என்பவருக்கு நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஏலம் உறுதி செய்து உத்திரவு வழங்குவதற்கு 31.03.2022–ல் பெறப்பட்ட நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு –</u>அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 68 (23)</u>

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு கைலாசநாதர் கோவில் எதிர்ப்புறமுள்ள பஜனைமடம் அருகில் உள்ள சிமெண்ட் சாலையானது மிகவும் பழுதடைந்து மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும், மேலும் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை கைலாசநாதர் கோவில் கும்பாபிஷேக 4–ம் ஆண்டு நிறைவு விழா சப்பரம் வீதி உலா வருவதற்கும் மேற்படி பழுதடைந்த சிமெண்ட் சாலையை பராமரிப்பு பணி செய்ய வேண்டி 12–வது வார்டு உறுப்பினர். திருமதி. சீ.அனுராதா மற்றும் அப்பகுதி பொதுமக்களின் மனுவைக்கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் 100 மீட்டர் சிமெண்ட் சாலையை பராமரிப்பு மற்றும் சிறுபாலம் (Culvert) அமைத்தல் பணிக்கு ரூ.1.75 லட்சம் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தபுள்ளி கோரி பணி ஆரம்பித்திட 09.04.2022 அன்று நகர்மன்றத்தலைவரிடம் பெறப்பட்ட முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு –</u>அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 69 (24)</u>**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான ஆட்டிறைச்சி கடைகள் மொத்தம் 20 எண்ணிக்கை உள்ளது. அவற்றுள் கடைஎண் 1,2,3,15,17,18,19 மற்றும் 20 ஆகிய 8 எண்ணிக்கையிலான கடைகள் மட்டுமே கடைகளை ஏலம் எடுத்த ஏலதாரர்களால் தற்போது கடை நடத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 12எண்ணிக்கை உள்ள கடைகள் கடை நடத்த இயலாத அளவில் பழுதடைந்துள்ளதால் ஏலதாரர்களால் கடை நடத்தப்படாமல் காலியாகவே உள்ளது. ஏற்கனவே 2021–22 ஆம் ஆண்டு கடைஎண்.10–ஐ நடத்திய ஏலதாரர் திரு.தங்கவேல் என்பவர் இறந்துவிட்டார். மேலும், கடை எண்.5 திரு.ரவி மற்றும் கடை எண்.6 திரு.வெள்ளையன் ஆகிய ஏலதாரர்கள் கொரோனா காரணமாக வியாபாரம் சரியாக இல்லை என்று கடை வேண்டாம் என எழுதி கொடுத்துவிட்டனர். எனவே, பழுதடைந்த மேற்படி கடைகளை பராமரிப்பு பணி செய்திட மதிப்பீடு தயார் செய்திடவும், ஆடு அடிக்கும் தொட்டியின் வடக்குபுற சுவர் மிகவும் சேதமடைந்துள்ளதால் உரிய மதிப்பீடு தயார்செய்திடவும்,

மேலும் தேவையான அடிப்படை பணிகள் (மின்விளக்கு, இரும்பு வலை மற்றும் கம்பிகள்) மேற்கொள்ளவும் மேற்காணும் பணிகள் முடிவடைந்ததும் ஏலம் நடத்தி ஏலம் எடுப்பவரிடம் கடைகளை ஒப்படைக்கும் வரை கடைஎண்.4,5,6,7,8,9,10,11,12,13,14 மற்றும் 16 என மொத்தம் 12 எண்ணிக்கை கடைகளுக்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு கேட்பு நிர்ணயம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.கு –</u>அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 70 (25)</u>**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.14 ஐ 2015–16 ஆம் ஆண்டு ஏலம் எடுத்த திரு.ஆர்.பாலகிருஷ்ணன் என்ற ஏலதாரர் 2020–21 , 2021–22 ஆகிய ஆண்டுகளுக்கு கடை எண்.14 க்கு நிலுவை வாடகை தொகை ரூ.10,11,392/– மற்றும் ஜேவிவிடி கடை எண்.1 ஏலம் எடுத்த ஏலதாரராகிய திரு.எல்.சிவலிங்கம் என்பவர் இந்நகராட்சிக்கு சொந்தமான ஜேவிவிடி கடை எண்.1 க்கு 2019 –20 ஆண்டு வாடகை நிலுவை தொகை ரூ.31,982 மற்றும் 2020 –21 ஆம் ஆண்டு நிலுவைத் தொகை ரூ.62,244/– மற்றும் 2021 –22 ஆம் ஆண்டு நிலுவைத் தொகை ரூ.78,429/– ஆக பெருமொத்தம் ரூ.1,72,605/– யை தாரமங்கலம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை நிலுவையாக இருந்ததால், மேற்படி பேருந்து நிலைய கடை எண்.14, ஜேவிவிடி கடை எண்.1 ஆகிய இரு கடைகளையும் 29.03.2022 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நகராட்சி நிர்வாகத்தால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் ஜேவிவிடி கடை எண்.2 ஐ ஏலம் எடுத்த ஏலதாரராகிய திருமதி.சம்பு என்பவர் கொரோனா காரணமாக வியாபாரம் சரியாக நடைபெறவில்லை என்றும் தனக்கு சந்தர்ப்ப சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் ஜேவிவிடி கடை எண்.2 ஐ வேண்டாம் என்று தாரமங்கலம் நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்துவிட்டார்.

எனவே, மேற்படி பேருந்து நிலைய கடை எண்.14 ன் மொத்த வாடகை நிலுவை தொகை ரூ.10,11,392/– ஜேவிவிடி கடை எண்.1ன் மொத்த வாடகை நிலுவை தொகை ரூ. 1,72,605/– ஆகிய நிலுவை வாடகை தொகையினை ஏலம் எடுத்த ஏலதாரர்களிடமிருந்து வசூல் செய்யும் பொருட்டு மாவட்ட/சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும், மேலும், பேருந்து நிலைய கடை எண்.14 , ஜேவிவிடி கடை எண்.1, ஜேவிவிடி கடை எண்.2 ஆகிய கடைகளை 2022–23 ஆம் ஆண்டுக்கு பொதுஏலம் நடத்தி ஏலம் எடுத்த ஏலதாரர்களுக்கு காய உத்தரவு வழங்கும் வரை மேற்படி கடைகளுக்கு 2022–23 ஆம் ஆண்டுக்கு மாதாந்திர வாடகை தொகை நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 71 (26)**

தாரமங்கலம் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதை தொடர்ந்து புதியதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளுக்கு VPN இணைப்பு வழியாக UTIS (Urban Tree Information System) மென்பொருள் நடைமுறைப்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தாரமங்கலம் நகராட்சி UTIS (Urban Tree Information System) மென்பொருள் நடைமுறைப்படுத்துதல் பொருட்டு அனைத்து பிரிவுக்கும் தனித்தனி கணிப்பொறி சாதனங்கள் பொருத்தப்பட்டு பொதுமக்கள் விண்ணப்பங்கள் மீதான ரசீதுகள் வழங்குதல், சொத்துவரி, குடிநீர் வரி போன்ற அன்றாட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, அவசரநிலை கருதி முதல் கட்டமாக BSNL நிறுவனத்திடம் VPN இணையதள வசதி , ஈரோடு சொசைட்டியில் Dot Matrix Printer paper வாங்கிடவும் மற்றும் கீழ்க்காணும் கணிப்பொறி சாதனங்கள், ஜெனரேட்டர் சாதனங்கள் கீழ்க்காணும் தரத்தில் கீழ்க்காணும் எண்ணிக்கையில் குறைவான ஒப்பந்தபுள்ளியில் கொள்முதல் செய்திட இதற்கான செலவினங்களை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கு 07.04.2022 ம் தேதியில் பெறப்பட்ட மன்றத்தலைவரின் முன்அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Computer:10 th Generation: Processor, Q470 Chip set, 16 GB RAM, 1TB Hard Disk,DVD Driver, Wisdom 10 Pro 24 ” LED Monitor with Web Camera & Speaker | 2 Nos |
| 2. | TVS -80 Column Dot Matrix Printer | 1 Nos |
| 3. | K7- Antivirus | 5 Users |
| 4. | 5KV – UPS with required Backup | 1 No |
| 5. | Dot Matrix Printer paper | 10,000 |

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 72 (27)**

தாரமங்கலம் நகராட்சியின் பேருந்து நிலைய கடைகள் **2015–16** ஆம் ஆண்டிற்கு பேருந்து நிலைய கடை எண் **1** முதல் **15** வரை ஏலம் விடப்பட்டதில், ஏலதாரர்களால் மேற்படி கடைகள் அதிகபட்ச வாடகைதொகையாக மாதாந்திர வாடகை அடிப்படையில் ஏலம் கோரி எடுக்கப்பட்டதில், **2015–16** முதல் **2019–20** வரை வாடகைத் தொகை செலுத்தாமல் உள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| பேருந்து நிலைய கடை எண் | ஏலதாரர் பெயர் | வருடம் | நிலுவைத் தொகை ரூ. (இதர வரிகள் நீங்கலாக.) |
|---|---|---|---|
| கடைஎண்1 | திரு.சுந்தரகணேசன் | 2015–16முதல் 2019–20 வரை | **825048.00** |
| கடைஎண்2 | திரு.சுந்தரகணேசன் | 2015–16முதல் 2019–20 வரை | **456421.00** |
| கடைஎண்3 | திரு.சுந்தரகணேசன் | 2015–16முதல் 2019–20 வரை | **494550.00** |
| கடைஎண்4 | திரு.சுந்தரகணேசன் | 2015–16முதல் 2019–20 வரை | **208956.00** |
| கடைஎண்8 | திரு.உதயகுமார் | 2015–16முதல் 2019–20 வரை | **159376.00** |
| கடைஎண்11 | திரு.ராஜேந்திரன் | 2015–16முதல் 2019–20 வரை | **877184.00** |
| கடைஎண்12 | திரு.விஸ்வநாதன் | 2015–16முதல் 2019–20 வரை | **1209938.00** |
| கடைஎண்13 | திருமதி.மலர் | 2015–16முதல் 2019–20 வரை | **1560920.00** |
| கடைஎண்14 | திரு.பாலகிருஷ்ணன் | 2015–16முதல் 2019–20 வரை | **836491.00** |
| கடைஎண்15 | திரு.உதயகுமார் | 2015–16முதல் 2019–20 வரை | **471428.00** |
| | | மொத்தம் | **7100312.00** |

மேலும், நவீன ஆட்டிறைச்சி கடை எண்.4 மற்றும் 7 ஆகியவற்றின் நிலுவைத் தொகை இதரவரிகள் உட்பட 2016–17 ஆம் ஆண்டு ஏலம் எடுத்த ஏலதாரர்கள் கீழ்க்கண்டுள்ள விவரப்படி நிலுவைத்தொகை வைத்துள்ளனர்.

| ஆட்டிறைச்சி கடை எண் | ஏலதாரர் பெயர் | வருடம் | நிலுவைத் தொகை ரூ.(இதர வரிகள் நீங்கலாக.) |
|---|---|---|---|
| கடைஎண் 4. | திரு.பழனிசாமி | 2016–17 முதல் 2017–18 | 35578.00 |
| கடைஎண் 7. | திரு.கிட்டு | 2016–17 முதல் 2017–18 | 37744.00 |
| | | மொத்தம் | 73322 |

ஆகவே, மேற்படி பேருந்து நிலைய கடைகளின் வாடகை நிலுவைத் தொகை மற்றும் ஆட்டு இறைச்சிக்கடைகள் நிலுவை வாடகைத் தொகை வசூலிக்கும் பொருட்டு ஏலதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவும், மற்றும் சேலம், ஓமலூர்ஆகிய நீதிமன்றங்களில் கடைகளை எலம் எடுத்த ஏலதாரர்கள் மீது வழக்கு தொடரவும், அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 73 (28)**

தாரமங்கலம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பயிற்சிக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழக அங்கீகாரத்தில் இயங்கிவரும் P.S.MUTHU COLLEGE OF PHYSICAL EDUCATION & TEACHER TRAINING,Seepalakottai Road, Sukkangalpatti 625-540 (PG SANITARY INSPECTOR) இறுதி ஆண்டு படித்து வரும் மாணவி எஸ்.அனிதா த/பெ. சங்கர் என்பவருக்கு தாரமங்கலம் நகராட்சியின் பொதுசுகாதாரம் தொடர்பான செயல்முறை விளக்க பயிற்சி 18.04.2022 முதல் 02.06.2022 வரை வழங்கிட 18.04.2022 ம் தேதியில் பெறப்பட்ட மன்றத்தலைவரின் முன்அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 74 (29)**

தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை குப்பைக்கிடங்கில் கொட்டி வைத்து குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து அரைத்து நுண்ணுயிரி செயலாக்கம் (Micro Composting) முறையில் உரம் தயாரித்தல் பணிக்கு தேவையான இயந்திரம் கொள்முதல் செய்து பயன்படுத்த வேண்டியுள்ளதால், குப்பைகளை தரம்பிரிக்கும் இயந்திரங்கள் தேவையான அளவில் கொள்முதல் செய்திட இதற்கான செலவினங்களை அரசின் ஏதாவது ஒரு நிதியிலிருந்தோ அல்லது தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் இருந்தோ மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 75 (30)</u>**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான D கிரேடு பேருந்து நிலையத்தை 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டு புதுப்பிக்க வேண்டி இவ்வலுவலக ந.க.எண். 469/2018/அ1.நாள்.07.10.2021 மற்றும் 23.03.2022 ன்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சேலம் மேற்கு சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதன் பொருட்டு, தற்போது, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சேலம் (மேற்கு) சேலம் அலுவலக ந.க.எண். 38727/2022/அ4 நாள்.05.04.2022 ன் படி வரப்பெற்ற கடிதத்தில் மேற்படி பேருந்து நிலையத்தில் குறைகள் கண்டறியப்பட்டு, கீழ்க்காணும் குறைகள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| 1. | கழிப்பிட வசதி இல்லை. |
| 2. | மின்விளக்கு வசதி இல்லை. |
| 3. | நேர அட்டவணை வாகனங்கள் வழித்தட பலகைகள் இல்லை. |
| 4. | மாற்றுத்திறனாளிகளுக்கான Ramp வசதி இல்லை. |
| 5. | Feeding Room வசதி இல்லை. |

மேற்காணும் குறைகள் நிவர்த்தி செய்திட தேவையான பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மேலும், தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான D கிரேடு பேருந்து நிலையத்தை 2022–23 ஆண்டிற்கு உரிமம் புதுப்பித்து அதன்பின் பேருந்து நிலை ய சுங்கவசூல் செய்வதற்கு பொது ஏலம் விடப்பட்டு காயம் உத்தரவு வழங்கும் வரை 2022–23 ஆண்டிற்கு பேருந்து நிலைய சுங்கவசூல் கேட்பு நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்கு அளித்திட மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**<u>தீர்மான எண் – 76 (31)</u>**

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மான்ய கோரிக்கை அறிவிப்பு எண்.24–ல் தமிழகத்தில் 3 மாநகராட்சிகள் மற்றும் 22 நகராட்சிகளில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதன்படி தாரமங்கலம் நகர்ப்பகுதியில் புதியதாக நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைப்பதின் மூலம் நகர பகுதியில் உள்ள மாணவர்கள் மற்றும் அனைத்து பொதுமக்களும் தங்களது அறிவு திறனை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும், என்பதாலும் மேலும் மாணாக்கர் தங்களது கல்வி தரத்தினை மேம்படுத்துவதற்கும், அரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்பு பெறுவதற்கு போட்டி தேர்வுகளில் கலந்து கொள்வதற்கும், பயன் உள்ளதாக இருக்கும் என்பதாலும் மேலும் நகர்ப்பகுதி மட்டுமல்லாமல் நகராட்சி சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கும் பயன் பெறுவர் என்பதாலும் மேற்கண்ட சூழ்நிலையில் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் தாரமங்கலம் கிராமம் புலஎண்.358/3–ல் நத்தம் காலியிட வகைப்பாடு உள்ள நிலத்தில் சுமார் 5000 சதுரடி பரப்பளவில் புதிய நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023–ன் கீழ் அமைத்திட உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்பிடவும், மேற்படி இடத்தில் நூலகம் அமைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்நுழைவு அனுமதி கோரி செயற்குறிப்பு அனுப்பிட 21.04.2022 அன்று நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் பெறப்பட்ட முன்அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

**<u>அ.கு –</u>** அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 77 (32)</u>**

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2022–23 மான்ய கோரிக்கையில் தாரமங்கலம் நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம், குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளை பயோ மைனிங் முறையில் கழிவுகளை அகற்ற அறிவிப்பு செய்துள்ளார்கள் என்கின்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு –</u>**அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 78 (33)</u>**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி, பொதுசுகாதார பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு இருப்பில் உள்ள சேமநலநிதி தொகைக்கு ஏற்கனவே 1998 ஆம் ஆண்டு முதல் வட்டி முன்மொழிவு செய்து தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது 1998 முதல் 2020–2021 ஆம் ஆண்டு வரை வட்டி முன்மொழிவு செய்யப்படாமல் நிலுவையாக உள்ளதால் மேற்படி ஆண்டுகளுக்கு சேமநலநிதி தொகை வட்டி முன்மொழிவு தயார் செய்யவும், மேற்படி பணிகள் மேற்கொள்ளவும் தகுதியான நபர்கள் ஒப்பந்தபுள்ளி மூலம் கோரி பணிமேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் <u>09.04.2022</u> அன்று நகர்மன்றத்தலைவரிடம் பெறப்பட்ட முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு –</u>**அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 79 (34)</u>**

தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்குவதற்கு 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட பச்சை வண்ண மற்றும் நீல வண்ணங்களில் 200 எண்ணிக்கை சின்டெக்ஸ் கம்பெனி பிளாஸ்டிக் பக்கெட்டுகள் குறுகியகால ஒப்பந்தபுள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 09.04.2022 அன்று நகர்மன்றத்தலைவரிடம் பெறப்பட்ட முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு –</u>**அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண் – 80 (35)</u>**

தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளின் பொதுசுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பொது சுகாதார வாகன எண். TN.27 w.6780-ன் பழுதான பாகங்களை பழுது நீக்கம் செய்திட உரிய நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும், மேலும் FC பணிகள் முடித்திடவும்,மேற்படி ட்ராக்டரில் FC பணிகள் முடித்திடும் வரை குப்பைகள் தேங்காமல் இருக்க உள்ளூர் ட்ராக்டரை வாடகைக்கு அமர்த்திட , குறுகிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் , அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் 09.04.2022 அன்று நகர்மன்றத்தலைவரிடம் பெறப்பட்ட முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு –</u>**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 81 (36)**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் நகராட்சியின் வருவாய் நிதி 2020–21 ம் ஆண்டின் ஆண்டுக்கணக்குகள் நகராட்சி நாளேடு மற்றும் துணைப்பதிவேடுகள் துணைகொண்டு கேட்பு வசூல் நிலுவைப் பட்டியல் மற்றும் வைப்புத் தொகை பதிவேடு முன்பண வைப்புத்தொகை பதிவேடு, கடன் பதிவேடு, முதலீடுகள் பதிவேடு இதர சேமநலநிதி, சுவர்ண ஜெயந்தி கணக்குகள் இதர பதிவேடுகள் மான்யம் மற்றும் சொத்தாக்கம் தேய்மான கணக்கீடு அனைத்தும் ஒருங்கிணைத்து வருவாய் நிதிக்கான இருப்பாய்வு கணக்கு, வரவு செலவு கணக்கு, இருப்பு நிலை குறிப்புகள் உள்ளடக்கிய ஆண்டுக்கணக்குகள் தயாரித்துக் கொடுக்கும் பணிகளை தகுதியான நபர்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரி பணி வழங்கவும் அதற்கான செலவினத்தை தாரமங்கலம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் 09.04.2022 அன்று நகர்மன்றத்தலைவரிடம் பெறப்பட்ட முன் அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 82 (37)**

தாரமங்கலம் நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த காலத்தில் திரு.தங்கமணி என்ற ஒப்பந்ததாரர் என்பவர் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால், தனது ஒப்பந்ததாரர் பதிவு செய்ததை 2012 முதல் 2021 வரை புதுப்பிக்கப்படவில்லை. தற்போது உடல்நலம் பெற்றுள்ள தாகவும், தற்போது 2022–23ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரராக புதுப்பித்துக் கொடுக்க வேண்டி வரப்பெற்றுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 83 (38)**

தாரமங்கலம் நகராட்சி திட்டப்பணிகள் செய்து கொடுப்பதற்கு ஒப்பந்ததாரர் கௌதம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்பவர் 2022–23 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரராக புதுப்பித்துக் கொடுக்க வேண்டி வரப்பெற்றுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 84 (39)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்திட ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற ஸ்ரீ ராகவேந்திரா அன்ட் கோ என்ற நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு –அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 85 (40)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்திட ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற கணேஷ்பிரபு கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 86 (41)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்திட ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற ஆர்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 87 (42)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்திட ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற ஏசிஎம் அன்ட் கோ என்ற நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் –88 (43)**

தாரமங்கலம் நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்து வந்த திரு.எம்.சின்னதம்பி (ஒப்பந்ததாரர்) மீண்டும் 2022–2023 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரராக புதுப்பித்து செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற திரு.எம்.சின்னதம்பி என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 89 (44)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டிற்கு திட்ட பணிகள் மற்றும் பொது நிதி பணிகளை செய்திட ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொடுக்கும்படி வரப்பெற்ற செல்லமுத்து த/பெ.அர்த்தனாரி என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 90 (45)**

தாரமங்கலம் நகராட்சியில் பழைய 11வது வார்டு ஓம்சக்தி கோவில் சந்து திரு.மோ.சித்தகவுண்டர் கதவு எண்.11–3/41 கொண்டுள்ள வீட்டின் குடிநீர் இணைப்பு எண்.3028 முகவரியில் கண்டுள்ள குடிநீர் இணைப்பை தற்காலிகமாக ரத்து செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளதின் அடிப்படையில் 2022–23 ஆம் ஆண்டின் குடிநீர்கட்டண கேட்பு நிர்ணயம் செய்வதை விலக்கு அளிக்கவேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் – 91 (46)**

தாரமங்கலம் நகராட்சியின் வாரச்சந்தையில் மின் இணைப்பு வசதி, குடிநீர் வசதி மற்றும் சந்தை பராமரிப்பு ஆகிய பணிகள் செய்து தரும்படி வரப்பெற்றுள்ள திரு.பெரியசாமி த/பெ.கந்தசாமி கணக்குப்பட்டி பிரிவு ரோடு, தாரமங்கலம் என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு –**அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் . 46 (1) முதல் 91 (46 )வரை, நாள்.09.05.2022**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**
**சேலம் மாவட்டம்.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**
**சேலம் மாவட்டம்.**

## <u>தாரமங்கலம் நகர்மன்ற அவசரக்கூட்ட 20.05.2022 ன் உண்மை நகல்</u>

2022 ம் ஆண்டு மே மாதம் 20.05.2022ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகராட்சி அலுவலக முதல் தளத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **திரு.டி.எம்.எஸ்.குணசேகரன் அவர்கள்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

<u>தீர்மான எண் –92 (1)</u>

அரசாணை நிலை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81A மற்றும் அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குள் உள்ள சொத்துக்களின் சொத்துவரியினை 01.04.2022முதல் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மண்டல அடிப்படை மதிப்பு உயர்வு செய்யப்பட்டு இதன் விவரங்கள் யாவும் பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சபனைகள் 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க கோரி 12.04.2022 அன்று பொதுமக்கள் அறியும்படி தினசரி நாளிதழ்கள் மற்றும் நகராட்சி இணையதளம், அறிவிப்பு பலகை ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்சொன்ன கால அளவான முப்பது நாட்கள் முடிந்த பின்னரும் அதாவது 14.05.2022 வரை சொத்துவரி சீராய்வு தொடர்பாக ஆட்சேபனைகள் எதுவும் வரப்படவில்லை.

எனவே, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.45, நாள்.08.04.2022–ல் அனுமதிக்கப்பட்டவாறு தாரமங்கலம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரிகளுக்கான மண்டல அடிப்படை மதிப்பினை உயர்வு செய்து வரி சீராய்வு மேற்கொள்ளவும் மேலும், சொத்துவரி / காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து வரி சீராய்வு மேற்கொள்ளவும் இந்நகர்மன்றம் அனுமதித்தப்படி கீழ்கண்டவாறு சொத்துவரி, காலிமனைவரி உயர்வு செய்து, மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு – சொத்து வரி

| வ. எண் | தற்போதைய மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு (பைசா) | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (பைசா) |
| 1. | A | 0.50 | குடியிருப்பு<br>600 ச.அடி<br>600–1200 ச.அடி<br>1200–1800 ச.அடி<br>1801 ச.அடி மேல் | <br>1.25<br>1.50<br>1.75<br>2 | <br>0.625<br>0.75<br>0.875<br>1.00 |
| | | | குடியிருப்பு அல்லாதவை<br>கல்வி நிறுவனம்<br>தொழிற்சாலை<br>வணிகம் | <br>1.75<br>1.75<br>2.00 | <br>0.875<br>0.875<br>1.00 |
| 2. | B | 0.30 | குடியிருப்பு<br>600 ச.அடி<br>600–1200 ச.அடி<br>1200–1800 ச.அடி<br>1801 ச.அடி மேல் | <br>1.25<br>1.50<br>1.75<br>2 | <br>0.375<br>0.45<br>0.525<br>0.6 |
| | | | குடியிருப்பு அல்லாதவை<br>கல்வி நிறுவனம்<br>தொழிற்சாலை<br>வணிகம் | <br>1.75<br>1.75<br>2.00 | <br>0.525<br>0.525<br>0.6 |
| 3. | c | 0.20 | குடியிருப்பு<br>600 ச.அடி<br>600–1200 ச.அடி<br>1200–1800 ச.அடி<br>1801 ச.அடி மேல் | <br>1.25<br>1.50<br>1.75<br>2 | <br>0.25<br>0.30<br>0.35<br>0.40 |
| | | | குடியிருப்பு அல்லாதவை<br>கல்வி நிறுவனம்<br>தொழிற்சாலை<br>வணிகம் | <br>1.75<br>1.75<br>2.00 | <br>0.35<br>0.35<br>0.40 |

புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு – காலியிட வரி

| வ.எண் | தற்போதைய மண்டலம் | தற்போதைய மண்டல மதிப்பு (பைசா) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (பைசா) |
|---|---|---|---|---|
| 1 | A | 0.20 | 100 % | 0.40 |
| 2 | B | 0.15 | 100 % | 0.30 |
| 3 | C | 0.10 | 100 % | 0.20 |

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

தாரமங்கலம் நகராட்சி பகுதி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022, நகராட்சி நிர்வாக

இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள்.01.04.2022–ல் தெரிவித்துள்ளவாறும், இந்நகர்மன்ற தீர்மான எண்.45, நாள்.08.04.2022–இல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் வரப்பெறாததால் மேற்காணும் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுசீராய்வு மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண் – 93 (2)</u>

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்) துறை நாள்.13.05.2022–ல், தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் சர்வே எண்.244/3–ல், உள்ள நகராட்சி மயானத்தில் ரூ.144.50 லட்சம் மதிப்பீட்டில் நவீன எரியவாயு தகனமேடை அமைத்தல் பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி நிர்வாக அனுமதியினை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று 27.05.2022ஆம் தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தாரமங்கலம் நகராட்சியானது பேரூராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளது. தாரமங்கலம் நகராட்சி கீழ்சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் நகரினை ஒட்டியுள்ள சர்வே எண்.244/3–இல் மொத்த விஸ்தீர்ணம் 5.33 ஏக்கரில் விஸ்தீர்ணம் 2.47 ஏக்கர் பரப்பளவில் வளமீட்பு பூங்காவும் மற்றும் மீதமுள்ள மொத்த விஸ்தீர்ணம் 2.86 ஏக்கர் பரப்பளவில் நகராட்சி மயானம் செயல்பட்டு வருகிறது. இம்மயானத்தில் இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டும், மற்றும் எரியூட்டப்பட்டும் வருகிறது.

மேலும், இம்மயானப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள இறந்தவர்களின் உடல்கள் நினைவுச்சின்னமாக சிறிய அளவிலான நினைவு மேடைகள் அமைத்து மயானப்பகுதி முழுவதும் நினைவு மேடைகளாக ஆக்கிரமித்து தற்போது இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் பகுதிகளில் பெரும் சிக்கலாக உள்ளது. பின்வரும் காலங்களிலும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதில் சிக்கல் எழும் நிலை உள்ளதாலும் தாரமங்கலம் நகராட்சி வளர்ந்துவரும் நகராட்சியாக இருப்பதாலும் இம்மயானத்தினை சுகாதாரமான முறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் பராமரிக்கப்படவேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டும் இம்மயான வளாகத்தில் சர்வே எண்.244/3–ன் மேற்கு பகுதியில் நவீன எரிவாயு கட்டடம் அமைத்து மயானத்திற்கு வரும் இறந்தவர்களின் உடல்களை சிறந்த முறையில் தகனம் செய்யும் வகையில் எரிவாயு தகனமேடை அமைப்பது மிகவும் அவசியமானதாக உள்ளதால் மேற்படி மயான வளாகத்தில் உள்ள அனைத்து

நினைவு மேடைகளையும் ஊர் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள், காவல்துறையினர், வருவாய்துறையினர் ஒத்துழைப்புடன் முழுமையாக அகற்றிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் சர்வே எண்.244/3–ல், உள்ள நகராட்சி மயானத்தில் ரூ.144.50 லட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் நவீன எரியவாயு தகனமேடை அமைத்திட ஏதுவாக மேற்படி வளாகத்தில் உள்ள அனைத்து நினைவு மேடைகளையும் ஊர் முக்கிய பிரமுகர்கள் , பொதுமக்கள், காவல்துறையினர், வருவாய்துறையினருடன் கலந்தாய்வுகூட்டம் நடத்தி நினைவு மேடையினை அகற்றும் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் . 92 (1) முதல் 93 (2) வரை, நாள்.20.05.2022**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**
**சேலம் மாவட்டம்.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**
**சேலம் மாவட்டம்.**